بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/01/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

மாநபி (ஸல்) அவர்களின் இறைநேசம் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இறைநேசத்திற்கான எண்ணற்ற நிகழ்வுகள் உள்ளன. அன்னாரது உள்ளத்தில், எந்நேரமும் இறைநேசம் எனும் ஒரு பெருங்கடல் அலைமோதிக் கொண்டிருந்தது. இந்த விஷயத்தில்தான், அன்னாரது ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு நிகழ்வும் சென்று முடிகின்றது என்றே சொல்ல வேண்டும். இதன் ஒரு காட்சி உஹுத் போரில் தொன்படுகிறது, அங்கே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறைவன் மீதான பேரன்பின் தவிப்பு, ஓர் ஒப்பற்ற மற்றும் தனித்துவமான முறையில் அமைந்திருந்தது.

ஹஸ்ரத் பரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹுத் நாளில், நாங்கள் இணைவைப்பவர்களை எதிர்கொண்டோம். கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் வில்லாளிகள் கொண்ட ஒரு படைக்குழுவை நிர்ணையித்து, ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களை அவர்களுக்குத் தலைவராக நியமித்தார்கள். மேலும், “நாங்கள் அவர்களை வெற்றி கண்டதாக நீங்கள் பார்த்தாலும் உங்கள் இடத்தை விட்டு நகரக்கூடாது; அவர்கள் எங்களை வென்றுவிட்டதாகப் பார்த்தாலும், அப்பொழுதும் எங்களுக்கு உதவி செய்ய வரக்கூடாது” என்று கூறினார்கள். அதாவது, வெற்றி தோல்வி ஆகிய இரண்டு சூழ்நிலைகளிலும், நீங்கள் உங்கள் இடத்தை விடக்கூடாது.

அறிவிப்பாளர் விவரிக்கிறார்: எங்களுடன் போர் நடந்தபோது, எதிரிகள் ஓடிப்போய் விட்டனர். எதுவரையெனில், இணைவைப்பாளர்களான பெண்கள் மலைகளை நோக்கி ஓடுவதை நான் பார்த்தேன். அப்போது முஸ்லிம்கள் “போர்ச் செல்வம்! போர்ச் செல்வம்!” என்று கூறத் தொடங்கி விட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அவர்களைத் தடுத்தார்கள். மேலும், “நீங்கள் உங்கள் இடத்தை விட்டு நகரக்கூடாது” என நபி பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்கு அறிவுறுத்தியுள்ளார்கள் என்று கூறினார்கள். ஆனால், முஸ்லிம்கள் குன்றை விட்டுவிட்டு போர்ச்செல்வத்தின் பக்கம் வந்தபோது, அல்லாஹ்வும் அந்த முஸ்லிம்களை விட்டும் முகந்திருப்பி விட்டான். போர் தலைகீழாக

மாறியது; எதிரிகள் மீண்டும் தாக்குதல் நடத்தி விட்டனர். இதனால் எழுபது முஸ்லிம்கள் ஷஹீதானார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: அந்தத் தருணத்தில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் மலையடிவாரத்தில் ஒதுங்கியிருந்தார்கள். அப்பொழுது அபூசுஃப்யான் ஓர் உயர்ந்த இடத்தில் ஏறி நின்று, 'உங்களிடையே முஹம்மது இருக்கிறாரா? {(ஸல்)}' என்று கூவினார். பெருமானார் (ஸல்) அவர்கள், "அவருக்குப் பதில் அளிக்காதீர்கள்" என்று கூறினார்கள். பின்னர் அவர், 'உங்களிடையே இப்னு அபீ கஹாஃபா (அதாவது, அபூபக்ர் (ரலி) அவர்கள்) இருக்கிறாரா?' என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், "பதில் அளிக்காதீர்கள்" என்று கூறினார்கள். பிறகு அவர், 'உங்களிடையே உமர் பின் கத்தாப் இருக்கிறாரா?' என்று கேட்டார். ஆனால், எந்தப் பதிலும் வராததைக் கண்ட அபூசுஃப்யான், 'இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள்; உயிரோடு இருந்திருந்தால் நிச்சயம் பதில் அளித்திருப்பார்கள்' என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவர்கள், 'அல்லாஹ்வின் எதிரியே! நீ பொய் சொல்கிறாய்; உனக்கு எதிரில் உன்னை இழிவுபடுத்தக்கூடியவர்களை அல்லாஹ் உயிரோடு வைத்திருக்கிறான்' என்று உரக்கக் கூறலானார்கள் {ஆனால், மாநபி (ஸல்) அவர்கள் தடுத்து விட்டார்கள்.}

அப்பொழுது அபூசுஃப்யான், 'ஹுபல் சிலை ஓங்குக' என்று முழக்கமிட்டார். அவர் இவ்வாறு சொன்னதும் பெருமானார் (ஸல்) அவர்கள் துடித்துப் போய், "நீங்கள் இதற்குப் பதில் சொல்லுங்கள்" என்று கூறினார்கள். சஹாபா பெருமக்கள், 'நாங்கள் என்ன பதில் சொல்லட்டும்?' என்று பணிவுடன் கேட்டார்கள். "அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் அனைவரையும் விட மேலானவன்; அனைவரையும் விடப் பெரியவன்' என்று சொல்லுங்கள்" எனக் கூறினார்கள். மீண்டும் அபூசுஃப்யான், 'எங்களுக்கு உஸ்ஸா (சிலை) இருக்கிறது, உங்களுக்கு எந்த உஸ்ஸா (சிலையும்) இல்லை' என்று கூறினார். நபி பெருமானார் (ஸல்) அவர்கள், "இதற்கு பதில் அளித்திடுங்கள்" என்று கூறினார்கள். சஹாபா பெருமக்கள், 'என்ன சொல்ல வேண்டும்?' என்று வினவினார்கள். "அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் எங்கள் உதவியாளன். உங்களுக்கு எந்த உதவியாளரும் இல்லை' என்று சொல்லுங்கள்" என்று கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீதான நேசத்தில் ஷிர்க்கின் சாயல்கூட பட விடமாட்டார்கள். பிறகு, மக்கள் கப்ருகளை வணங்கும் இடமாக ஆக்கிக் கொள்ளக்கூடாது என்ற கவலை மாநபி (ஸல்) அவர்களுக்கு இருந்து வந்தது. ஆனால், பேரிழந்த நிலை என்னவென்றால், இன்று இதற்கு மாற்றமாகவே அமல் செய்யப்படுகிறது. முஸ்லிம்கள் பீர்மார்கள் மற்றும் ஃபகீர்மார்களின் கப்ருகளுக்குச் சென்று வழிபடுகிறார்கள்; சஜ்தாக்கள் செய்கிறார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மரணத்தின் தருவாயில் இருந்த நோயின் போது, அதாவது, இறுதி நேரத்தில், “யூதர்கள் மற்றும் கிறித்தவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்; அவர்கள் தங்களுடைய நபிமார்களின் அடக்கத்தலங்களை வணக்கத்தலங்களாக ஆக்கிக் கொண்டார்கள்” என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: “நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருக்காவிட்டால், ஹுஸூர் (ஸல்) அவர்களின் கப்ர் திறந்த வெளியாக வைக்கப்பட்டிருந்திருக்கும்; ஆனால், அதை வணக்கத்தலமாக ஆக்கிவிடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன்.

எனவே, திறந்த வெளியாக வைக்கப்படவில்லை.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: இப்பொழுதோ அங்குள்ள அரசாங்கம் அதைச் சுற்றி முறையாக ஏற்பாடு செய்து வைத்துள்ளது. எவ்விதமான இணைவைப்பும் நடக்கக்கூடாது என்பதற்காக வேலிகள் மற்றும் சுவர்கள் அமைத்துள்ளார்கள். குறைந்தபட்சம் அவர்கள் இந்த நல்ல வேலையை செய்துள்ளார்கள்.

மேற்கொண்டு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: இறைவனின் ஓரிறைமையை விவரிக்கின்ற ஓர் அறிவிப்பு வருகிறது, ஹஸ்ரத் இப்னு அபீ கஅப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இணைவைப்பாளர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், ‘நீங்கள் உங்கள் இறைவனின் தலைமுறையை எங்களுக்கு சொல்லுங்கள்’ என்று கேட்டார்கள். இதனால் அல்லாஹ் قُلْ هُوَاللّٰهُ اَحَدٌ ۝٢ اَللّٰهُ الصَّمَدُ ۝٣ முதலிய வசனங்களை இறக்கினான். பொருள்: “அல்லாஹ் ஒருவன். அல்லாஹ் தேவையற்றவன். அவன் தனித்தவனும் ஈடு இணையற்றவனும் ஆவான். அவன் எவரையும் பெறவுமில்லை; எவராலும் பெறெப்படவுமில்லை.” பிறந்த எதுவாயினும் அது மரணித்தே தீரும். மேலும், மரணிக்கின்ற எதற்கும் வாரிசும் இருந்தே தீரும். கண்ணியமும் மேன்மையும் மிக்க அல்லாஹ் மரணிக்கவும் மாட்டான்; அவனுக்கு எந்த வாரிசும் இருக்காது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஸைத் பின் ஃஹாலித் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஹுதைபியாவில், இரவு பொழிந்த மழைக்குப் பிறகு, ஃபஜ்ர் தொழுகை தொழ வைத்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் தொழ வைத்தபிறகு, மக்கள் பக்கம் திரும்பி, “கண்ணியத்திற்குரியவனும், மேலானவனும் ஆன உங்கள் இறைவன் என்ன கூறினான் என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று வினவினார்கள். அதற்கு மக்கள், ‘அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நன்கறிவார்கள்’ என்று பணிவுடன் கூறினார்கள். அன்னார் கூறினார்கள்:- அல்லாஹ் என்னிடம் கூறினான்: “என் அடியார்களில் சிலர் என் மீது ஈமான் கொண்டவர்களாக காலை பொழுதை அடைந்தார்கள். சிலர் நிராகரிப்பாளர்களாக இருந்தார்கள்.

அதாவது, மக்களில் சிலர், இரவு பெய்த மழையைக் கண்டதும், அவர்களில் சிலர் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்ற நிலையிலும், சிலர் நிராகரிக்கின்றவர்களாகவும் காலைப் பொழுதை அடைந்தார்கள்.

(அல்லாஹ் கூறினான்:) எவர், 'அல்லாஹ்வின் அருள் மற்றும் அவனுடைய கருணையால் எங்கள் மீது மழை பொழிந்தது' என்று கூறினாரோ, அவர் என் மீது ஈமான் கொள்ளக்கூடியவர் ஆவார். மேலும், நட்சத்திரங்களினால் மழை பொழிந்தது என்று கூறியவர்கள் நிராகரிப்பவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் மஹ்மூத் பின் லபீத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "எனக்கு உங்களை நினைத்து, மிகச்சிறிய ஷிர்க்கைப் பற்றிதான் எல்லாவற்றையும் விட அதிகமான அச்சம் இருக்கிறது" என்று கூறினார்கள். சஹாபா பெருமக்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} மிகச் சிறிய ஷிர்க் என்றால் என்ன?' என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு மாநபி (ஸல்) அவர்கள், "அது பகட்டு, அதாவது, வெளிக்காட்டுதல் ஆகும்" என்று கூறினார்கள்.

எனவே, நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். மறுமையில் எந்தப் பாலமும் பயனளிக்காது. அல்லாஹ்வின் அருள் மட்டுமே பயனளிக்கும். எனவே, மாநபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலையே அல்லாஹ் பிடித்தமானதாகக் கொண்டிருக்கிறான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாருங்கள்! எத்தகைய இறைஞானம் இருந்தது! எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தார்கள்! எவ்வாறு அல்லாஹ்வுக்கு அஞ்சிய வண்ணம் இருந்தார்கள். அன்னார் எல்லா மனிதர்களைக் காட்டிலும் முழுமை பெற்றவராக இருந்த போதிலும், எல்லா விதமான குற்றங்களை விட்டும் தூய்மையானவராக இருந்த போதிலும், இந்தத் தூய்மை மற்றும் மாசற்ற தன்மை இருந்தும், நிலை எப்படி இருந்தது என்றால், எந்நேரமும் அல்லாஹ்வுக்கு அஞ்சியவாறு இருப்பார்கள். நன்மைக்கு மேல் நன்மை புரிவார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த நற்செயல்கள் புரிவார்கள். ஒரு நன்மைக்குப் பிறகு இன்னொரு நன்மை என செய்து கொண்டே செல்வார்கள். ஒருபோதும் தீமை என்ற பேச்சுக்கே இடம் இருந்ததில்லை. அதன் சாயல்கூட இருந்ததில்லை. எந்நேரமும் இறைவனை வணங்குவதில் மூழ்கியிருப்பார்கள். இறைவனுக்கு அஞ்சுவார்கள்; மிகவும் அஞ்சி வந்தார்கள். அவ்வளவு இருந்தும், தம் புறமிருந்து இயன்ற அளவு எச்சரிக்கையாக இருப்பார்கள். இறைவனின் மாட்சிமையைக் காணும்போது, அந்தத் தேவையற்றவனின் அவையில், தம்முடைய அனைத்து நற்செயல்களையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் இஸ்திஃக்ஃபார் செய்வார்கள். வாய்ப்பு கிடைக்கும்போது தவ்பா செய்வார்கள். ஆக, நேசத்தின் நிலை எப்படி இருந்தது என்றால், எல்லாத் தருணத்திலும் அருளுக்குரிய நாவு இறைவனை நினைவுகூர்வதில் நனைதிருந்தது.

ஹஸ்ரத் ஸம்ரஹ் பின் ஜந்தப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான்கு விஷயங்கள் அனைத்துக் கூற்றுகளைக் காட்டிலும் சிறந்தவையாகும். அதில் எதிலிருந்து நீ துவங்கினாலும், அதில் உனக்கு எந்த இழப்பும் இல்லை. இவற்றைக் கொண்டு துவங்கினால் எல்லாவற்றையும் விடச் சிறந்ததாகும்; மிகவும் அருளுக்குரிய விஷயங்கள் ஆகும். அவை யாவை?

1. சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்). 2. அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே). 3. லா இலாஹ இல்லல்லாஹ் (அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை). மற்றும் 4. அல்லாஹு அக்பர் (அல்லாஹ் எல்லாரையும் விடப் பெரியவன்).

ஆக, இந்த விஷயங்கள் எப்பொழுதும் சிந்தனையில் இருந்தால், அல்லது வேலை செய்யும்போதும், இந்த விஷயங்களை முன்னிறுத்தினால், அவற்றில் பரக்கத்தே பரக்கத் ஏற்படும்.

ஹஸ்ரத் அபூ பக்ரஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எப்பொழுது ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயம் நடந்தாலும், ஹுஸூர் (ஸல்) அவர்கள் உடனடியாக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக சஜ்தாவில் விழுந்து விடுவார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வை நினைவுகூர்வதை விட அதிகம் எந்த ஒரு விஷயமும் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து காப்பாற்றக்கூடியதல்ல.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பிறிதோரிடத்தில் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என் வீட்டில், எனது முறை இருக்கும் நாளில், எனது நெஞ்சுக்கும் மடிக்கும் நடுவில் வஃபாத் ஆனார்கள் என்பது அல்லாஹ் என் மீது புரிந்த அருட்கொடைகளில் ஒன்றாகும். மேலும், அல்லாஹ் அன்னாரது வஃபாத்தின் போது, எனது உமிழ்நீரையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய உமிழ்நீரையும் ஒன்றிணைத்தான். அது எப்படியெனில், அப்துர் ரஹ்மான் அவர்கள் என்னிடம் வந்தார்கள். அவர்களுடைய கையில் மிஸ்வாக் இருந்தது. அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என் மீது சாய்ந்திருந்தார்கள். அன்னார் அதன் பக்கம் பார்ப்பதை நான் கண்டேன். ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு மிஸ்வாக் செய்வது பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். நான், ‘தங்களுக்காக அதை வாங்கட்டுமா?’ என்று பணிவுடன் கேட்டேன். அன்னார், “ஆம்” என்று தலையை அசைத்துக் கூறினார்கள். நான் அதை அன்னாருக்குக் கொடுத்த போது, அது அன்னாருக்குக் கடினமானதாக இருந்தது. நான் ‘அதைத் தங்களுக்கு மென்மையாக்கிக் கொடுக்கட்டுமா?’ என்று பணிவுடன் கேட்டேன். அன்னார், “ஆம்” என்று தம் தலையை அசைத்துக் கூறினார்கள். நான் அதை மென்மையாக்கினேன்.

நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஒரு தண்ணீர் பாத்திரம் இருந்தது. அன்னார் தமது அருளுக்குரிய கைகளைத் தண்ணீரில் இடுவார்கள். பிறகு, அவற்றைத் தமது அருளுக்குரிய முகத்தில் தடவுவார்கள்.

பிறகு, لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ اَنَّ لِلْمَوْتِ سَكَرَاتٌ என்று கூறுவார்கள். அதாவது, அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை. மரணத்தின் சிரமங்கள் இருக்கின்றனதான். பிறகு, அன்னார் தமது கையை உயர்த்தி, فِى الرَّفِيْقِ الْاَعْلٰى (உயர்ந்த தோழனை நோக்கி) என்று கூறத் துவங்கினார்கள். எதுவரை என்றால், அன்னார் வஃபாத் ஆகி விட்டார்கள். மேலும், அன்னாரது அருளுக்குரிய கை தொங்கி விட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: வல்ல இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறுதி நேரத்தில், தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கினான். அதாவது, நீர் விரும்பினால் உலகில் வாழலாம். அல்லது விரும்பினால் என் பக்கம் வந்துவிடலாம் எனத் தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கினான். அன்னார், “என் இறைவா! நான் உன் பக்கம் வருவதையே விரும்புகிறேன்” என்று பணிவுடன் கூறினார்கள். அன்னாரது அருளுக்குரிய உயிர் பிரிந்த அந்தக் கடைசி நொடிப் பொழுதில், அன்னார் بِالرَّفِيْقِ الْاَعْلٰى என்றே கூறினார்கள். அதாவது, இப்பொழுது நான் இந்த இடத்தில் இருக்க விரும்பவில்லை. நான் என் இறைவனிடம் செல்ல விரும்புகிறேன்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَّبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)